**பல்லவி**

களத்திலும் அகதியாய்
புலத்திலும் அகதியாய்
காட்டிலும் அகதியாய்
கடலிலும் அகதியாய்

களத்திலும் அகதியாய்
புலத்திலும் அகதியாய்
காட்டிலும் அகதியாய்
கடலிலும் அகதியாய்

எல்லைகள் கடந்து வந்தோம்
தேசங்கள் கடந்து வந்தோம்
கடல்கள் தாண்டி வந்தோம்
நாட்டைப் பிரிந்து வந்தோம்

உலகம் எங்குமே
அனைத்தும் இழந்துமே
அகதியாக வாழ்கின்றோ..ம்
எனது பெயரோ ஈழத் தமிழன்
நான் ஒரு அகதியே

ஓஹோஹோ எனது பெயரோ
ஈழத் தமிழன்
நான் ஒரு அகதியே

சரணம்-1

எங்கள் வீடும் எங்கள்
தோட்டமும்
யாரும் இல்லா அகதியே

எங்கள் காணியும் எங்கள்
கோவிலும்
வானம் பார்த்த அகதியே

உறவுகள் எல்லாம் பிரிந்ததே
ஊர்கள் எல்லாம் அழிந்ததே
மண்ணும் தோன்றி கல்லும்
தோன்றா
மூத்தகுடிகள் நாமா?

ஓஹோஹோ
மண்ணும் தோன்றி கல்லும்
தோன்றா
மூத்தகுடிகள் நாமா?

களத்திலும் அகதியாய்
புலத்திலும் அகதியாய்

சரணம்-2

ஆறு கோடி தமிழரிருந்தும்
ஆட்சி செய்ய நாடு இல்லை
வெற்றுப் பெருமை பேசிப்
பேசி
வீணாய்ப் போன
மனிதரானோம்..

சாதனைகள் படைத்தால்
என்ன
பூமிப் பந்தில் நாங்கள்
அகதியே

மண்ணும் தோன்றி கல்லும்
தோன்றா
மூத்த குடிகள் நாமா?

ஓஹோஹோ
மண்ணும் தோன்றி கல்லும்
தோன்றா
மூத்த குடிகள் நாமா?

களத்திலும் அகதியாய்
புலத்திலும் அகதியாய்
காட்டிலும் அகதியாய்
கடலிலும் அகதியாய்

களத்திலும் அகதியாய்
புலத்திலும் அகதியாய்
காட்டிலும் அகதியாய்
கடலிலும் அகதியாய்

எல்லைகள் கடந்து வந்தோம்
தேசங்கள் கடந்து வந்தோம்
கடல்கள் தாண்டி வந்தோம்
நாட்டைப் பிரிந்து வந்தோம்

உலகம் எங்குமே
அனைத்தும் இழந்துமே
அகதியாக வாழ்கின்றோ..ம்
எனது பெயரோ ஈழத் தமிழன்
நான் ஒரு அகதியே

ஒஹோஹோ எனது பெயரோ
ஈழத் தமிழன்
நான் ஒரு அகதியே